

## லுத்தர் முத்திரையின் விளக்கம்

முதலில் ஒரு கருப்பு சிலுவை உள்ளது, அதன் இயற்கையான நிறத்திலுள்ள இதயத்தில் உள்ளது. இது சிலுவையில் அறையப்பட்டவர் மீதுள்ள விசுவாசமே நம்மை இரட்சிக்கிறது என்பதை எனக்கு நினைப்பூட்டுகிறது. இருதயத்தில் நம்புகிற எவரொருவரும் நியாந்தீர்க்கப்படுவார்கள் (ரோமர் 10; 10). கருப்பு சிலுவை, மரணத்தையும் வலியையும் கொடுக்கிறது, ஆனால், அது இருதயத்திற்கு அதன் இயற்கையான நிறத்தை விட்டுவிடுகிறது. சிலுவையில் அறையப்பட்டவர் மீதுள்ள விசுவாசத்தினால் நீதிமான்கள் பிழைப்பார்கள் (ரோமர் 1:17). வெள்ளை ரோஜாவின் நடுவில் இருதயம் நிற்க வேண்டும். விசுவாசம், மகிழ்ச்சியையும், ஆறுதலையும், சமாதானத்தையும் தருகிறது என்பதை காட்டுவதாகும் - அது விசுவாசியை ஒரு வெள்ளையும், மகிழ்ச்சியுமான ரோஜாவில் வைக்கிறது. விசுவாசம் உலகம் கொடுக்கிறபிரகாரம் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் தருவதில்லை (யோவான் 14:27).

வெள்ளை என்பது ஆவிகள் மற்றும் தேவதூதர்களின் நிறம் (காண்க: மத்தேயு 28:3; யோவான் 20:12). இந்த ரோஜா ஒரு வான-நீல வயல்வெளியில் நிற்க வேண்டும் -மகிழ்ச்சியான ஆவி மற்றும் விசுவாசம் என்பது எதிர்கால பரலோக, மகிழ்ச்சியின் ஆரம்பம் என்பதை இது குறிக்கிறது, இது இப்போது தொடங்குகிறது, இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் நம்பிக்கையில் புரிந்து கொள்ளப்படுகிறது. பரலோகத்தின் ஆசீர்வாதம் என்றென்றும் நீடிக்கும் அதற்கு முடிவே இல்லை என்பதைக் குறிக்கும் வகையில் நீல நிற வயலைச் சுற்றி ஒரு தங்க வளையம் உள்ளது. தங்கம் மிகவும் மதிப்புமிக்க, விலையுயர்ந்த உலோகம் என்பதைப் போல, பரலோக ஆசீர்வாதம் நேர்த்தியானதும், எல்லா மகிழ்ச்சிக்கும் அப்பாற்பட்டதும், எந்த உடைமைகளையும் விட சிறந்ததுமாயிருக்கிறது.

*(மார்ட்டின் லுத்தர் அவர்கள் லாசரஸ் ஸ்பெங்லர் என்பவருக்கு ஜூலை 08, 1530 அன்று எழுதிய கடிதத்திலிருந்து)*

ISBN 978-1-960840-05-9
90000
9 781960 840059



# மார்ட்டீன் லூத்தரின்

# சிறிய ஞானோபதேசம்

# (சிறிய கத்தேகிஸ்மு)